இறைவனின் திருப்பெயரால்...

**المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالجبيل**

مسابقة علمية بمناسبة يوم المفتوح للجاليات التاميلية في التاريخ١٤٣٧/٠٧/٠٨هـ

அல்-ஜுபைல் மாநகரில்...

## இஸ்லாமிய தஃவா நிலைய மஸ்ஜிதில்

**15-04-2016 வெள்ளியன்று நடைபெறவுள்ள**

**18-வது**

# ஒரு நாள் இஸ்லாமிய மாநாடு

**போட்டிக்கான வினாத்தாள்**

போட்டியாளரின் பெயர் :.......................................................................

இகாமா இலக்கம் :.......................................................................

தொழிலக/கேம்ப் முகவரி :.......................................................................

தொலைபேசி / மொபைல் :.......................................................................

ஆண் / பெண்: .......................................................................

**போட்டியின் விதிமுறைகள்:**

சென்ற ஆண்டு அல்-ஜுபைல் தஃவா நிலையத்தில் நடைபெற்ற
ரமழான் முழு இரவு நிகழ்ச்சியில் கொடுக்கப்பட்ட
இஸ்லாமின் இறைக்கோட்பாடு நூலில் இருந்தும் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன

- வினாபத்திரங்கள் பூர்த்திச் செய்யப்பட்டு **01-04-2016** க்கு முன்னதாக தபால் உறையிலிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். தாமதமாக வரும் வினாபத்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- ஒருவர் ஒருவினாத்தாளுக்கு மட்டுமே விடையளிக்க முடியும்.
- விடைகள் தெளிவாக, சுயமாக அளிக்கப்படவேண்டும். இறையச்சத்துடன் பிறரை பார்த்து எழுதுவதையும் கேட்டு எழுதுவதையும் தவிர்த்துக் கொள்ளவும்.
- பரிசுபெறத் தகுதிபெறுபவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளும் பட்சத்தில் மாத்திரம் பரிசுவழங்கப்படும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகக் கொள்ளப்படும்.

இப்போட்டியின் நோக்கம் பரிசுகளை வென்றெடுப்பது மட்டுமல்ல
அனைவரும் மார்க்க அறிவை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதே!

ஆகவே, எவர்கள் ஈமான் கொண்டு நல்ல அமல்கள் செய்கிறார்களோ அவர்களுடைய தீங்குகளை அவர்களை விட்டும் நிச்சயமாக நீக்கி விடுவோம்; இன்னும், அவர்கள் செய்த நன்மைகளுக்கு அவற்றைவிட மிக்க அழகான கூலியை,
நிச்சயமாக நாம் அவர்களுக்கு கொடுப்போம். அல்-குர்ஆன் 29:7.

நபி (ஸல்)கூறினார்கள்: ''கல்வியை தேடும் வழியில் ஒருவர் நடந்து வந்தால் சொர்கத்தின் பாதையை அவருக்கு அல்லாஹ் இலகுவாக்குகின்றான்" (முஸ்லிம்)

**ஒரு நாள் மாநாட்டுக்கு அனைவரையும் அன்போடு அழைக்கின்றது**

## அல்-ஜுபைல் தஃவா மற்றும் வழிகாட்டல் மையம்
## (தமிழ் பிரிவு)

## AL- JUBAIL DAWAH &GUIDANCE CENTER

**(TAMIL SECTION)**

**P.O. Box 1580, AL- JUBAIL - 31951**

மேலதிக விபரங்களுக்கு : மௌலவி S.யாஸிர் ஃபிர்தௌஸி
☏0555988967/☏013 3625500 Ext. 1087

அல் – ஜுபைல் த.ஃவா நல்வழிகாட்டல் மையம் (தமிழ் பிரிவு) சேவைகள்...

- அல்–குர்ஆன் மற்றும் ஹதீஸ் வகுப்புகள்
- நோன்பு,ஹஜ்,உம்ரா வகுப்புகள்
- மாணவர்களுக்கான அல்–குர்ஆன்,ஹதீஸ் வகுப்புகள்
- குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள்
- வாராந்திர மாதாந்திர சொற்பொழிவு நிகழ்ச்சிகள்
- ஜும்ஆ, பெருநாள் குத்பாகள்
- கேம்ப் தஃவா நிகழ்ச்சிகள்
- குடும்பத்தினர் சந்திப்பு நிகழ்ச்சிகள்
- தமிழ் சகோதர சந்திப்பு நிகழ்ச்சிகள்
- ரமலான் இரவு நேர நிகழ்ச்சிகள்
- ஒரு நாள் இஸ்லாமிய மாநாடு
- உம்ரா பயணம்

**தஃவா சென்டரின் நிகழ்ச்சிகளை அறிந்துக்கொள்ள 0571058676**

jubaildawah.tamilsection@gmail.com | jubaildawah tamil | jubaildawah tamil

www.jubaildawahtamil.blogspot.com, www. jubaildawah. Org, www.suvanacholai.com

## 18 வது ஒரு நாள் இஸ்லாமிய மாநாடு - கேள்விப்பதில்

- **கோடிட்ட இடத்தை நிரப்புக?**

1. அல்லாஹ்வுக்கு நீங்கள் ________________ கூறாதீர்கள். அல்லாஹ்வுக்குறிய ____________ நிச்சயமாக அல்லாஹ் தான் அறிவான்.
2. பெண்களில் ____________ அவர்களின் சிறப்பு, ஏனைய உணவை விட __________ என்ற உணவுக்கு உரிய சிறப்பை போன்றதாகும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
3. இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் ______________ என்ற இயற் பெயரையும், ________________ என்ற புனைப் பெயரையும், ________________ என்ற பட்டப் பெயரையும் பெற்றிருந்தார்.
4. நபித் தோழர்கள் ________________ அளவு செய்த தர்மம், அவர்களுக்கு பின் வந்தவர்கள் ____________________ அளவு செய்யும் தர்மத்தை விட உயர்வானது.
5. மறுமை நாளில் அல்லாஹ்விற்கும் அவருக்கும் இடையில் ____________ இருக்க மாட்டார்கள். மேலும் உங்களில் ஒவ்வொருவரிடமும் ______________ பேசுவான்.

- **கீழ் கண்ட வினாக்களுக்கு விடை அளிக்கவும்?**

1. அல் குர்ஆனுக்கும் ஆதாரபூர்வமான நபி மொழிகளுக்கும் இடையில் முரண்பாடு என்று வாதிப்பவர்கள், எப்படிப் பட்டவர்கள் ஆவார்கள்?
2. ஹுதைபியாவின் மரத்திற்கு கீழ், நபி (ஸல்) அவர்களிடம் வாக்கு பிரமாணம் (பைஅத்) செய்து கொடுத்த நபித் தோழர்கள் எத்தனை பேர்? மேலும் அவர்களின் சிறப்பு என்ன?
3. நபி (ஸல்) அவர்கள், ஒரு பெண்ணை உரிமையிட்டு விடுதலை செய்து விடுங்கள், நிச்சயமாக இந்த பெண் ஒரு முஃமின் என்று கூறினார்கள், காரணம் என்ன?
4. கருவில் உள்ள சிசுவிற்கு உயிர் கொடுக்கும் முன், மலக்குகள் பதிவு செய்யும் விஷயங்கள் எந்தனை?அவை என்ன?
5. முஃமீன்களின் தாய்மார்களின் இரண்டு சிறப்புகள் என்ன?

- **கீழ் கண்ட வினாக்களுக்கு உரிய விடையை அடையாளப்படுத்தவும்.**

1 பத்ர் போரில் கலந்து கொண்ட நபித் தோழர்கள் எத்தனை பேர்?

**அ. 314 ஆ. 331 இ. 313**

2 நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களில் முதல் அந்தஸ்தை வகிப்பவர் யார்?

**அ. ஆயிஷா (ரலி) ஆ. உம்மு ஸலாமா (ரலி) இ. கதீஜா (ரலி)**

3 மரண நேரத்தில் உயிரை கைப்பற்றுபவர் யார்?

**அ. இஸ்ராயீல் (அலை) ஆ. இஸ்ராஃபீல் (அலை) இ. மலக்குல் மௌத்**

4 ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு எத்தனை இறக்கைகள் இருந்தன?

அ. 700 ஆ. 600 இ. 70

5 யார் ஒருவர் பர்ளான தொழுகைக்கு பிறகு எந்த அமலை செய்தால், அந்த நபர் சொர்க்கம் செல்ல மரணத்தை தவிர வேறு எதுவும் தடையாக இருக்காது?

**அ. பர்ளான தொழுகைக்கு பிறகு திக்ர் செய்வது**
**ஆ. ஸூரத்துன் நாஸ், ஸூரத்துல் ஃபலக், ஸூரத்துல் இக்லாஸ் 3 முறை ஓதுவது**
**இ. ஆயத்துல் குர்ஷியை ஓதுவது**

- **கீழ் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை சரியான முறையில் பொருத்தவும்.**

| | |
|---|---|
| 1. நேர் வழியும் பாதுகாப்பும் பெற்ற ஒரே கூட்டம் | - உயிர் தியாகி |
| 2. இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்களின் தந்தை | – உண்மையாளர் |
| 3. இமாம் இப்னு தைமிய்யாவின் (ரஹ்) நூலின் விரியுறையாளர் | - அல் ஃபிர்கத்துன் நாஜியா |
| 4. ஸித்தீக் | - அப்துல் ஹலீம் இப்னு அப்துஸ் ஸலாம் |
| 5. ஷஹீது | - அஷ் ஷேக் உஸைமீன் |

- **கீழ் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியா தவறா என்று அடையாளப்படுத்தவும்.**

1. இதை தர்மம் செய்து, உங்களை நரக நெருப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அது பேரீத்தம் பழத்தின் ஒரு துண்டு.

   *(சரீ) ---- (தவறு)*

2. சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையில் நின்று கொண்டு, நபி (ஸல்) அவர்கள், யா அல்லாஹ் என்னை மன்னித்து விடு என்னை மன்னித்து விடு எனறு பிரார்த்தனை செய்தார்கள்.

   *(சரீ) ---- (தவறு)*

3. அல்லாஹ்வின் நாட்டம் இரண்டு வகைப்படும், அவை வாழ்வாதாரம் மற்றும் ஆயுட்காலம்

   *(சரீ) ---- (தவறு)*

4. சூரியன் உதிக்கும் முன் உள்ள தொழுகையையும், சூரியன் மறைவுக்கு பின் உள்ள தொழுகையையும் நிறைவேற்றினால், உங்கள் இறைவனை மறுமை நாளில், பௌர்ணமி அன்று சந்திரனை பார்ப்பது போல் பார்க்கலாம்.

   *(சரீ) ---- (தவறு)*

5. இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் பிறந்த ஊர் ஹர்ரான் , ஹிஜ்ரீ 661 ஆண்டு, ரபிய்யுல் தானி மாதம் 10 ஆம் நாள் திங்கள் கிழமை அன்று பிறந்தார்கள்.

   *(சரீ) ---- (தவறு)*